போதியளவு தமிழ் கான்ஸ்டபிள்கள் வேண்டும்

Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9
போன் 389

இதழ் 83

National Tamil Daily

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க சித்திரை 22 முஹறம் 24 வெள்ளிக்கிழமை [5-5-67]

## வடபகுதி எம். பி. க்கள் அரசாங்கத்தைக் கேட்பர்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழ் மக்கள் அதிகமாக வசிக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்களில் பெரும்பான்மையானவர்கள் சிங்களக் கான்ஸ்டபிள்களாக இருப்பதாகவும், இப்பகுதிக்கு போதிய தமிழ்க் கான்ஸ்டபிள்களை அனுப்பிவைக்குமாறும் வடமாகாணத்தைச் சேர்ந்த தமிழ் எம். பி. க்கள் பாராளுமன்றத்தில் கேட்கவிருப்பதாகத் தெரிகிறது.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இடமாகிய யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் எல்லாமாக 670 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கடமையாற்றுவதாகவும், இவர்களில் 120 தமிழர்கள் மாத்திரம் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மிகுதி 550 சிங்களப் பொலிஸ் கான்ஸ்டபிள்களிலும் சுமார் 400 க்கும் மேற்பட்டவர்களுக்கு தமிழ் தெரியாதென்றும், இதனால் புகார்செய்யப் பொலிஸ் நிலையங்களுக்குச் செல்லும் பலரும் அங்கு தமிழ் தெரியாத பொலிஸாருடன் தமது புகார்களைச் சரியான

[6-ம் பக்கம் பார்க்க]

# யாழ்ப்பாணம் வந்த பஸ்கள் திரும்பப் பெறப்பட்டன

## அவற்றைத்திருப்பி அனுப்புமாறு எம். பி. தந்தி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்துக்கு முன்னர் அனுப்பப்பட்டிருந்த பஸ்கள் சில இங்கிருந்து திரும்பப்பெறப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது. பஸ் பற்றுக்குறையினால் ஏற்கனவே மோசமான நிலையிலிருக்கும் பஸ்போக்குவரத்துச் சேவை, இங்கு அனுப்பப்பட்ட பஸ்களில் சிலவற்றைத் திரும்பப்பெற்றுவிட்டதால் மேலும் மோசமடையுமென்று கூறி திரும்பப் பெற்ற பஸ்களுடன் மேலும் சில பஸ்களை இங்கு அனுப்புமாறு கோரி தீவுப்பகுதி எம். பி. திரு. வ. நவரத்தினம் தேசிய சேவைகள் அமைச்சருக்குத் தந்தியொன்றை அனுப்பியுள்ளார்.

தென்னிலங்கையில் களை பிடுங்கும் இயக்கத்துக்குப் பயன்படுத்தவே இங்கிருந்து சில பஸ்கள் திருப்பப் பெறப்பட்டதாகக் கூறப்படுவதையும் திரு. நவரத்தினம் தமது தந்தியில் சுட்டிக் காட்டி இங்கு போக்குவரத்துச் சேவை மேலும் மோசமாகாமல் தடுப்பதற்கு உடனடியாக அந்த பஸ்களை இங்கு அனுப்புமாறு அவர் கேட்டுள்ளார்.

யாழ். நகரபஸ்நிலைய படுகொலை

## காரின் சொந்தக்காரர் றிமாண்டில் வைக்கப்பட்டார்

### இறந்தவரின் 'ஷேர்ட்' கழுவப்பட்டிருந்ததாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்துக்கு அருகாமையில் கிட்டிணன் என்ற [24 வயது] வாலிபர் குத்திப் படுகொலை செய்யப்பட்டது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட மோட்டார் காரின் சொந்தக்காரரான வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இரத்தினசபாபதி என்பவர் இம்மாதம் 9-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இரத்தினசபாபதி யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ஜமீல் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது அவரை றிமான்டில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டதைத் தொடர்

[6-ம் பக்கம் பார்க்க]

மக்களின் தோழன்!

சிங்கம் மார்க் சந்தனாதித் தைலம்

ஈழவள நாட்டின் வியாபாரிகள் எல்லோருமே வாங்கி விற்பது இது ஒன்றேதான்.

## "பொலிசார் என் தலையிலும் காலிலும் அடித்தார்கள்"

### வல்வெட்டித்துறை சம்பவ விசாரணையில் சாட்சியம்

வல்வெட்டித்துறை, வியா

வல்வெட்டித்துறையில் சென்ற மாதம் 8ந் திகதி மாலை நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் ஆர். ஞானசுந்தரம் என்னும் இளைஞர் மரணமானது சம்பந்தமாக பருத்தித்துறை மாஜிஸ்திரேட் இன்று மீண்டும் விசாரணை நடத்தினர்.

விசாரணையின்போது வேதவனம் வேற்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது-

"சம்பவம் நடந்த தினத்தன்று வல்வெட்டித்துறை சனசமூகநிலையத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு நானும் போயிருந்தேன். அன்று மாலை 6-30 மணியளவில் கூட்டம் ஆரம்பமானது. அக்கூட்டம் வல்வெட்டித்துறைப் பொலிஸார் பொதுமக்கள்மீது நடந்துகொண்ட தவறான செயல்களை ஆட்சேபித்து நடைபெற்றது. அக்கூட்டத்தில் நானும் ஒரு பேச்சாளனாகக் கலந்துகொண்டேன். எனது பேச்சு முடிந்து மற்றவர்கள் பேசிக் கொண்டிருந்தசமயம்பொலி

[6-ம் பக்கம் பார்க்க]

## "கோயிலுக்குச் செல்லும்போது கணவர் கள்ளு குடிக்கவில்லை"

### மூளாய் கொலை வழக்கில் இறந்தவரின் மனைவி சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"கோவிலுக்குச் செல்லுமுன் கள்ளுக்குடிப்பது சமய ஆசாரத்திற்கு மாறானது. அன்று ஆட்டைப் பலிகொடுக்க கோவிலுக்கு என்கணவர் போனபோது கள்ளுக் குடிக்கவில்லை. கோயிலால் வந்தபின் என்கணவர் வீட்டில் கள்ளுக் குடித்ததை நான் காணவில்லை. கோயிலால் வந்தபின் தேனீர் மட்டும் குடித்தார்."

மூளாய் கொலை வழக்கில் கொலையுண்டவரின் மனைவி செல்லம், எதிரிகளின் வழக்கறிஞர் இரகுபதியால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது மேற்கண்டவாறு கூறினர். இவ்வழக்கு மூன்றாவது தினமாக நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் வி. தென்னக்கோன் முன்னி

[6-ம் பக்கம் பார்க்க]

## சுவீப் முடிவுகள்

நேற்று கொழும்பில் இழுக்கப்பட்ட தேசியசுவீப் முடிவுகள் பின்வருமாறு:-

1-ம் பரிசு
36 J 0344 ரூ. 95,900

2-ம் பரிசு
13 M 0119 ரூ. 38,360

3-ம் பரிசு
21 U 0455 ரூ. 9,590

தலா 479 ரூபா 50 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 09 K 0466 | 13 E 0024 |
| 28 X 0689 | 21 Y 0588 |
| 15 X 0589 | 37 Y 0159 |
| 27 X 0356 | 14 F 0412 |
| 31 U 0058 | 10 P 0969 |
| [illegible] | [illegible] |
| 27 N 0850 | 37 T 0015 |

[6-ம் பக்கம் பார்க்க]

## சப்இன்ஸ்பெக்டர்மீது இன்று வழக்கு தாக்கல்

### வவனியா பலாத்கார சம்பவம் எதிரொலி

யாழ்ப்பாணம், வெள்ளி

வவுனியா பொலிஸ்நிலைய சப்-இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றித் தற்காலிகமாக வேலைநீக்கஞ்செய்யப்பட்டிருக்கும் திரு. பெரேரா இளம்பெண் ஒருவர்மீது பலாத்காரம் பிரயோகித்ததாகக் குற்றஞ்சாட்டி வவுனியா மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இன்று காலை வழக்கு தாக்கல்செய்யப்படும்.

இவ்வருடம் மார்ச் மாதம் 27ந் தேதி காலை வவுனியா

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நமதுநோக்கம், அகம்பாவ ஆணவ உணர்ச்சிகளை அறவே நீக்குவதாக இருக்க வேண்டும். அது நீங்காதவரை விமோசனத்துக்கு வழியில்லை. எல்லாப் பெரிய ஞானிகளும் உண்மையில் கூறுவது இதுதான். வெளியே தெய்வத்துக்குச் சரணகதியடைந்து உள்ளே தெய்வத்துடன் லயப்பட வேண்டும்.

— சுவாமிராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஞு
சித்திரை மீ 22உ. (5-5-67)


## காமன்வெல்த் பிரஜைகள்

ஐரோப்பிய பொதுச் சந்தையில் சேருவதற்கு மீண்டும் பிரிட்டன்மனுச் செய்துள்ளது. பிரஞ்சு அதிபர் ஜெனரல் டிகோலின் எதிர்ப்பு இம்முறை இருக்கமாட்டாது என எதிர்பார்க்கப்படுவதால் பொதுச்சந்தையில் பிரிட்டன் சேர்ந்துகொள்வது உறுதியாகிவிட்டது என்று கூறலாம். ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்வதால் காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கும் நாடுகளின், குறிப்பாக ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் பொருளாதாரம், வர்த்தகம்ஆகியவைகள் எவ்வளவுதூரம் பாதிக்குமென்பது ஒருபுறமிருக்க பிரிட்டனில் குடியேறியுள்ளகாமன்வெல்த் நாட்டைச் சேர்ந்தவர்களும் பிரிட்டனில், உழைத்துப் படிக்கும்ஆசியமாணவர்களும் எவ்வளவு தூரம்பாதிக்கப்படுவார்களென்பது ஆராயவேண்டிய விஷயம்

ஐரோப்பியபொதுச்சந்தையில் அங்கம் வகிக்கும் ஆறுநாடுகளுடனும் பிரிட்டிஷ் பிரதமர் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போது இனப் பிரச்னை கிளம்பவில்லை எனினும் பொதுச்சந்தை அங்கத்துவ ஐரோப்பியநாட்டுப் பிரஜைகள், காமன்வெல்த் நாட்டுப்பிரஜைகள் சம்பந்தமாகப் பிரஜைகள் தோன்றக்கூடுமென்றும் இதுபற்றித் தெளிவுபடுத்தப்பட்டுவிட வேண்டுமென்றும் பிரிட்டிஷ் அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

பிரிட்டனில் பல்கலைக் கழகங்களாயினும்மற்றும் தொழில்நுட்பக்கல்லூரிகளாயினும்சரி கல்வி கற்கும் வெளியாருக்கு அதாவது பிரிட்டிஷ் பிரஜைகளல்லாதவர்களுக்கு பிரிட்டிஷ் மாணவனைவிட மும்மடங்கு அதிகமானகட்டணம்வசூலிக்கப்படுகிறது. இதுமட்டுமல்லாது ‘உழைக்கும்போதே படிப்பும்’ என்ற உன்னத நோக்கத்துடன் வேலைபார்த்து அந்த வருவாயைக் கொண்டே படித்துப் பட்டம்பெறுவதற்காக பிரிட்டனுக்குச்செல்லும் ஆசிய மாணவர்கள் மிகக்கேவலமான தொழில் செய்து வாழவேண்டியநிலை இருக்கிறதென்பதை பிரிட்டனில் இந்திய ஹைகமிஷனராக இருந்த டாக்டர் ஜீவராஜ்மேத்தா சமீபத்தில் எடுத்துக் காட்டியிருந்தார். உயர்படிப்புப் படித்துப்பட்டம் பெறுவதற்காக லண்டன்சென்ற ஒரு குஜராத்திப் பிராமணர் இறைச்சிக்கடையில் உதவியாளராக வேலை பார்க்க நேர்ந்தது முதல் விஞ்ஞானப் பட்டதாரி ஒருவர்கூலிவேலைபார்த்து உடல்நிலையைக் கெடுத்துக்கொண்டதுவரை பலவித சம்பவங்களை டாக்டர் மேத்தா கூறியிருந்தார். ஆனால் பிரிட்டிஷாருக்கு இவ்வித மோசமான ‘தொழி’ல்லைப்பதில்லைஎன்பதையும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார். காமன்வெல்த் ஒருகுடும்பமென்று கூறப்படுவதுண்டு. இக்குடும்பத்தை சேர்ந்தவர்களுக்குள்ளேயேகல்விக்கட்டணத்திலும்தொழிலிலும் இவ்வளவுபாகுபாடுஇப்போதே இருக்கிறது. இந்நிலையில் ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்ந்துவிட்டால் ஐரோப்பிய நாடுகளின் பிரஜைகளையும் காமன்வெல்த் பிரஜைகளையும் பிரிட்டன் ஒரேவிதமாக நடத்துமென்றோ, நடத்த முடியுமென்றோ எதிர்பார்க்க முடியுமா?

ஐரோப்பியபொதுச்சந்தையில் பிரிட்டன் சேர்வதால் தோன்றக் கூடிய பிரச்னைகளில் ஒன்றுதான் இது. காமன்வெல்த்நாடுகள் குறிப்பாக ஆசிய—ஆபிரிக்க நாடுகள் சிந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய விஷயமுமாகும்.

மாவட்டசபைகள் கருத்தரங்கு

# மக்கள் ஆட்சிக்கு மாவட்ட சபைகள் அவசியம்

இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சி நிலவியபோது பரிபாலனத்தை சுலபமாகவும் திறமையாகவும் செய்வதற்காக அவர்கள் இந்நாட்டை பல மாகாணங்களாக்கிஒவ்வொருமாகாணத்தின் நிர்வாகத்தையும் ஒவ்வொரு அரசாங்க அதிபர்களின் பொறுப்பின்கீழ் விட்டனர். அன்று நாம் ஆங்கிலேயர்களால் ஆளப்பட்டு வந்தோம். ஆனால்நாடுசுதந்திரம் அடைந்தபின் மக்களுடைய பிரதிநிதிகள்ஆட்சிப் பீடத்திலமர்ந்து பரிபாலனம் செய்து வருகின்றனர். மத்திய அரசாங்கம் பிரதிநிதித்துவ அரசாங்கமாய் இருக்கும்பொழுது அவ்வரசாங்கத்துக்குக் கட்டுப்பட்டுள்ள மாகாண நிர்வாகம் மட்டும் மாகாண அதிபர்களிடம் விட்டுவைத்திருப்பது நியாயமா? நீதியா? தர்மமா? ஜனநாயக ஆட்சி நடைபெறும் ஈழவளநாட்டில் மாகாண நிர்வாகத்தைமட்டும் ஓர் எதேச்சையான அதிகாரியிடம் ஒப்படைத்திருப்பது விசனிக்கத்தக்கதாகும். மத்திய அரசாங்கத்தை மட்டும் மக்கள் பிரதிநிதிகள் ஆட்சிபுரியவில்லை. ஊராட்சி மன்றங்களையும் மக்கள் பிரதிநிதிகளே நிர்வகிக்கின்றனர். அங்ஙனமாயின் மாகாணநிர்வாகத்தைமட்டும் மாகாண அதிபர்களிடம் விட்டுவைத்திருப்பது வெட்கக்கேடான செயலாகும். மாகாண நிர்வாகத்தை அதிகாரிகளிடம் ஒப்படைத்திருப்பது ஜனநாயக ஆட்சிக்கே இழுக்காகும். எனவே மாகாண நிர்வாகத்தையும் அரசாங்க உத்தியோகத்தரிடமிருந்து விடுவித்து மாவட்டசபைகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

மாவட்ட சபை என்றால் என்ன? இலங்கையில் இருபத்திரண்டு மாவட்டங்கள் உண்டு. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு மாவட்ட சபைகள் அமைக்கப்படும். இம் மாவட்ட சபையை நிருவகிப்பவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளேயாவர். மாவட்ட சபை அமைக்கப்பட்டால் அதிக லஞ்ச ஊழல் தாண்டவம் ஆடும் என்று பலர் அபிப்பிராயப் படுகின்றனர். அதற்கு மேற்கோளாக இலங்கையில் உள்ள எந்த ஒரு ஊராட்சி மன்றமாயினும் லஞ்சஊழல் இன்றி செயல்படுகின்றதா? என வினவுகின்றனர். ஒப்புக் கொள்ள வேண்டிய விடயம்தான். ஆனால்கிணறு பாசிபிடிக்கும் என்பதற்காக நாம் கிணறை வெட்டாமல் இருக்க முடியுமா? பல விசேட அம்சங்கள் காணப்படும் ஒன்றில் சில குறைகள் காணப்படுவது இயற்கை. ஊராட்சி மன்றங்கள் மக்களுக்கு ஜனநாயகத்தில் பயிற்சி அளிப்பது போல் மாவட்ட சபைகளும் பயிற்சி அளிக்கும். இதனால் மக்கள் மனதில் ஆட்சி எமதே என்ற நல்லெண்ணம் உதயமாகும். ஆட்சியில் எமக்கும் பங்குண்டு என்று எண்ணுவார்களேயானால் நாட்டில் நல்லாட்சி ஏற்படும். ஆகையால் மாவட்டசபை அமைப்பது அவசியமும் அவசரமும் மாகும். இந்தியாவிலும் [Drstrict Board] மாவட்ட சபைகள் இருப்பதை நாம் அவதானிக்க வேண்டும். ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள எவரும் இதனை வரவேற்பர் என்பதில் சந்தேகமில்லை.

—ஓர் அன்பர்

## பிரச்னைகள் தீரும்

இலங்கையில் இருபத்து இரண்டு மாவட்டங்கள் உள்ளன. இந்த் இருபத்துஇரண்டு மாவட்டங்களில் தமிழ் பேசும் தமிழர் உள்ள மாவட்டமானாலும்சரி, சிங்களம் பேசும் சிங்களவர் உள்ள மாவட்டமானாலும்சரி, எந்த மாவட்டத்திலும் ஒரு மாவட்டசபையை அமைப்பதினால் எவ்வித மக்களும் எவ்விதத்திலும் பாதிக்கப்படப் போவதில்லை. ஒரு மாவட்டத்தில் ஒரு மாவட்ட சபையை அமைப்பதினால் அம் மாவட்டத்திலுள்ள மக்கள் நன்மை அடைவார்களேயன்றி தீமையடையப் போவதில்லை. நாம் யாழ்ப்பாணத்தை எடுத்துக்கொள்வோம். யாழ்ப்பாணமாவட்டத்தில் முற்றிலும் தமிழ் மக்கள் வசிக்கின்றார்கள். அந்தத் தமிழ்மக்களை எதிர்நோக்கிப் பல பிரச்னைகள் சூழ்ந்துள்ளன. மாவட்ட சபைகள் அமைப்பதினால் எல்லாப்பிரச்னைகளையும் தீர்த்துவிடலாம் என்று நான் கூறவில்லை. சமூகத்தில் உண்டாகும் பொதுவானபிரச்னைகளை ஒரளவு தீர்த்துவிட முடியும் என்பது திண்ணம்.

க. ஞா. அகஸ்தீன்,
கற்கோவளம்.

## ஒரே குரலில் கேட்க வேண்டும்

தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபட்டு தமிழ் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று விரும்பினால் பிரதமர் டட்லி சேனநாயக்காவுடன் ஒற்றுமையாகச் சேர்ந்து மாவட்ட சபை வேண்டும் என்பதை ஒரே குரலில் கேட்க வேண்டும்.

கே. எஸ். தம்பிராஜா,
பருத்தித்துறை.

## “உயர்நிலைக்கு வழி”

உரும்பராய், வியா.

“சமயக்குரவர் பாடிய பாடல்கள்யாவும் உயர்ந்த திருப்பாடல்கள். அழுது அழுது இறைவன் திருவடியடைந்த அன்பராகியஅப்பர் பெருமானது தேவாரப் பாடல்கள் தேனினும்இனிய பாடல்களாகும். இப்பாடல்களை நாவுக்கரசரது குருபூசைதினத்தில் மட்டும் ஓதினால்மட்டும்போதாது. ஒவ்வொரு நிமிஷமும் ஓதுதல் வேண்டும். அவ்வாறு யாம் ஓதுவமேயானால் உயர் நிலையை யாம் நிச்சயம் அடைவோம்” என்று உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் நடைபெற்ற திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை விழாவிலே பேசிய ஆசிரியர் திரு க. இ. சரவணமுத்து கூறினார்.

எழுநூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களும், ஆசிரியர்களும் பங்குபற்றிய இவ்விழாவிற்கு பாடசாலை அதிபர் திரு. சு. குமாரசேகரம் தலைமைதாங்கினார். ஒன்பதாம்வகுப்புமாணவர்களால் நடாத்தப்பெற்ற இக் குருபூசைவிழாவில் மாணவர்கள் பக்திப்பாடல்களை ஓதினர்.

## கல்விச் சுற்றுலா

காரைநகர், வெள்ளி

காரைநகர் இந்துக்கல்லூரி புவியியல் பிரிவு மாணவர்கள் ஒரு வாரம் கல்வி சம்பந்தமான ஒரு சுற்றுப் பிரயாணம் செய்து தென் இலங்கையில் பல பாகங்களையும், பல கைத்தொழில்களையும் பார்வையிட்டுத் திரும்பியுள்ளனர்.

## இடமாற்றம்

பண்டத்தரிப்பு, வியாழன்

இதுவரை இளவாலையிலிருந்து வந்த பெரிய விளான் கிராம சேவையாளர் கந்தோர் பண்டத்தரிப்புக்கு மாற்றப்பட விருக்கிறது.

## நாட்டிலும் நகரிலும்

‘நாடகம் நடத்தப் போகிறோம். ஒலிபெருக்கி உபயோகிக்க அனுமதி தாருங்கள்’ என்று ஒரு நாடக மன்றத்தினர் பொலிஸுக்கு விண்ணப்பஞ் செய்தார்கள். பொலிஸ் மேலதிகாரி ஒருவர் தாராள மனத்துடன், நாட்டில் கலைகள் ஓங்கி வளர வேண்டுமென்ற நந்நோக்குடன், தாமே கையெழுத்திட்டு ‘பெர்மிட்’ வழங்கினார்.

அன்றிரவு நாடகம் கனதடபுடலாக ஆரம்பித்தது. ஒலிபெருக்கிகள் அலறின. பெர்மிட் கொடுத்த பொலிஸ் அதிகாரிக்கு நாடகம் தன் வீட்டுக்கு அண்மையில்தான் நடக்கும் என்ற உண்மை தெரிய வேண்டிய அவசியமில்லை. தெரிந்தாலும் பெர்மிட் கொடுக்கும்போது அதைப்பற்றி அவர் சிந்திக்கவில்லை போலும். எப்படியிருப்பினும், நாள் முழுவதும் வேலை பார்த்துக் களைத்துப் போய் வீடு வந்து சாப்பிட்டுவிட்டு நிம்மதியாகப் படுத்துறங்கலாமென்று நினைத்து தலையணையில் சாய்ந்த பொலிஸ் அதிகாரியின் செவிகளில் நாடகத்தின் ரஸமான கட்டங்கள் சம்மட்டி அடிகள் போல வந்து சாடின.

பெர்மிட் கொடுத்ததற்கு நன்றி தெரிவிக்கும்முகமாக நாடக நிர்வாகிகள் ஒலிபெருக்கிக் குழாய் ஒன்றை பொலிஸ் அதிகாரி படுத்திருந்த அறையின் ஜன்னலுக்கு நேராகக் குறி பார்த்துப் பொருத்தியிருந்தார்கள். பொலிஸ் ரஸனையை திருப்தி செய்யும் நல்லெண்ணத்துடன் அவர்கள் இப்படிச் செய்தார்கள் என்பது நிச்சயம்.

நல்ல காரியம் செய்யப் போக அது பெரும்பாலும் விபரீதமாக முடிவது இக்கால சாபத்தீடுகளில்ஒன்று.

பொலிஸ் அதிகாரிக்கும் நாடகங்களுக்கும் வெகுதூரம். தினம்தினம் நிஜ வாழ்க்கையில் நடக்கும் எத்தனையோ நாடகங்களைக் கண்டும் கேட்டும் சலித்துப் போயிருந்தவருக்கு மயானகாண்டமும் மோகினி விலாசமும் நாராசம் கலந்த விஷம் போலிருக்கும்.

படுக்கையில் அங்குமிங்கும் புரண்டு படுத்துப் பார்த்தார் பொலிஸ் அதிபர். உறக்கம் என்பது கிட்டடிக்கும் வரவில்லை. அதோடு புழுக்கம் வேறு. அவருக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. மணியோ பதினொன்றுக்குக் கிட்டிவிட்டது. ஒலிபெருக்கி விளாசித் தள்ளிக்கொண்டிருந்தது.

சட்டென்று எழுந்தார் பொலிஸ் அதிகாரி. நேரே போனார்நாடகஅரங்கிற்கு. ‘ஒலிபெருக்கி வைப்பதற்கு லைசென்ஸ் எடுத்தீர்களா? என்று கேட்டார். ‘ஆம் ஐயா! இதோ இருக்கிறது’ என்று கூறி அவரே கையெழுத்திட்டுக் கொடுத்த பெர்மிட் துண்டை நீட்டினார்கள். அவர் அதைப் பேசாமல் வாங்கி வாசித்துவிட்டு நாலு துண்டாகக் கிழித்து சட்டைப் பையில் போட்டுக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தார்.

அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடாத்தப்படும் என்ற மூதுரைக்கிணங்க ஒலிபெருக்கி இல்லாமலே நாடகம் தொடர்ந்து நடைபெற்றது.

பொலிஸ் அதிபர் வீட்டில் அமைதியாகக்குறட்டை விட்டுத் தூங்கினார்!

அவர் செய்தது சரிதானா? பொலிஸ் அட்டூழியங்களில் இதுவுமொன்று என்று நினைக்கிறீர்களா? இல்லவே

[4-ம் கலம் பார்க்க]

[5-ம் கலத் தொடர்ச்சி]

இல்லை. அவர் செய்தது மிகவும் சரி. சட்டத்தின்படியும் முழுக்க முழுக்கச் சரி. எப்படியென்று பார்ப்போம்.

பொலிஸ் அதிகாரி என்ற முறையில் நாடகத்துக்கு ஒலிபெருக்கி பெர்மிட் கேட்கப்பட்டபோது, அரசியல் கூட்டங்களைப் போல அமளிதுமளிகளின்றி நாடகம் தீமையற்ற ஒரு பொழுதுபோக்கு ஆதலினால் ‘டக்’ கென்று பெர்மிட்டை வழங்கிவிட்டார்.

பின்பு அவர் சாதாரண பொதுமக்களில் ஒருவராக வீட்டில் படுத்துறங்க முயன்றபோது ஒலிபெருக்கியின் அலறல் அவருடைய முயற்சிக்கு இடையூறாக நின்றபோது பெர்மிட்டை கிழித்தெறிந்துவிட்டார்.

ஒலிபெருக்கி இடையூறாயிருக்கிறதென்று பொதுமக்கள் எவராவது பொலிசுக்கு முறையிட்டால் அவர்கள் அதை நிறுத்தும்படி கட்டளையிடலாம் என்பது சட்டம்.

பொலிஸ் அதிகாரி முதலில் பெர்மிட்டை வழங்கினார். பிறகு பொதுமகன் என்ற முறையில் தாமே முறையீடு செய்து அதன் பின் பொலிஸ் அதிகாரி என்ற முறையில் அதை ‘கான்சலும்’ செய்துவிட்டார். அவ்வளவுதான்.

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்னுமில் சமாதானத்தை நிலைநாட்ட பாப்பரசர் முயற்சி

## சமரச திட்டத்தை ஏற்குமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு வேண்டுகோள்

வத்திக்கான் நகரம், மே 4

**வியட்னுமில் சமாதரனத்தை நிலைநாட்டும் பொருட்டு புதிய சமாதான திட்டத்தை சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென சின்னப்பர் பாப்பரசர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

சமீபத்தில் வெளியாகிய சமாதானத் திட்டம் பற்றி பாப்பரசர் விபரமாக எதுவும் தெரிவிக்காதிருந்த போதிலும் ஐ, நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் வெளியிட்டுள்ளமூன்று.அம்ச சமாதான யோசனையைத் தான் பாப்பரசர் குறிப்பிட்டிருக்கலாமென அவதானிகள் கருதுகிறுர்கள்.

**ஜோன்சனின் முயற்சி**

இதற்கிடையே அமெரிக்க ஜனுதிபதி ஜோன்சன் பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியொன்றில் வியட்னும் போரை முடிவுக்குக் கொண்டுவந்து அங்கு சமாதானத்தை நிலைநாட்ட அமெரிக்கா தினமும் முயன்று வருவதாகத் தெரிவித்துள்ளார்.

வியட்னுமுக்கு இப்போதைக்கு மேலும் துருப்புக்கள் அனுப்பும் உத்தேசமில்லையெனவுப் அவர் அறிவித்துள்ளார். வியட்னுமில் அமெரிக்க இராணுவ தளபதியாக இருக்கும் ஜெனரல் வெஸ்ட் மோலண்ட் அங்கு அமெரிக்க படை பலத்தை வலுப்படுத்த மேலும் துருப்புக்கள் அனுப்பப்பட வேண்டுமென ஜோன்சனைக் கேட்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## அண்ணுவின் படத்தை ம. பொ. சி. திறந்தார்

சென்னை, மே 4

தமிழக முதலமைச்சர் திரு. சி. என், அண்ணுதுரையின் படத்தை தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் திறந்துவைத்தார்.

சென்னையை அடுத்த கந்தமல்லி பஞ்சாயத்து சபை சார்பில் அண்ணுதுரை. ம. பொ. சிவஞானம், ராஜரத்தினம் ஆகியோருக்கு அளித்த வரவேற்பின்போதே ம. பொ. சிவஞானம் அண்ணுதுரையின் உருவப்படத்தைத்திறந்து வைத்தார்.

அண்ணுதுரை ஜனுதிபதி பதவியையும் அடையவேண்டும் எனத்தாம் ஆசைப்படுவதாக திரு. ம. பொ. சி. திரு. அண்ணுதுரையைப் பாராட்டிப் பேசுகையில் தெரிவித்தார்.

## 'உரிமையற்ற தொழிலாளியிடம் விசுவாசத்தைஎதிர்பார்க்கமுடியாது'

மன்னுர், வியாழன்

''நாடற்றவர் என்ருேர் இனம் அழகுமிக்க இலங்கைத் தீவில் இருப்பது வேதனைக்குரிய ஒரு விஷயம். அடுத்த மேதினத்திற்கு இவ்வித நிலையை தேசிய அரசாங்கம் வைக்காது என நம்புவோம். உரிமையற்ற ஒரு தொழிலாளி தனது கடமைகளை விசுவாசமாகச் செய்வான் என்று எதிர்பார்க்க முடியாது.

நாட்டின் எதிர்காலம் பொருளாதாரத்திலேயே தங்கியுள்ளது. பாட்டாளி மக்களின் கடும் உழைப்பினுல்தான் நாட்டில் பொருளாதார சுபிட்சம் ஏற்பட முடியும். நமது பிரதமர் ஒரு ஜனநாயகவாதி. நிச்சயம் அவர் இந்த நாட்டில் மனித உரிமையை நிலைநிறுத்துவார்.'' என மன்னுர் மாவட்ட இலங்கை- இந்தியர் சங்கச் சார்பில் சங்க மண்டபத்தில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய எஸ்.ஆர். எம்.வி. வேலுசாமி கூறினுர்.

மன்னுர் பட்டினசபைத் தலைவர் ஜனுப் எம்.எஸ்.ஏ. ரஹீம் பேசுகையில், மலைநாட்டுத் தொழிலாளர் உட்படச் சகல தொழிலாளரும் விசுவாசமாக உழைத்து நாட்டின் அரசியல், பொருளாதார சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

திரு.எஸ். சுந்தரலிங்கம் நன்றி கூறினுர்.

## ''ஓட்டை உடைசல் பஸ்களை ஓட்டச்சொல்கிறுர்களே''

### பஸ்கண்டக்டர் கவலை

யாழ்ப்பாணம், வெள்ளி

''ஓட்டை, உடைசல் பஸ்களைஓட்டச் சொல்கிறுர்கள், பாதி வழியில் பஸ் பழுதடைந்ததும் பிரயாணிகள் எங்கள் மீது பாய்ந்து விழுகிருர்கள்'' என்று பஸ்கண்டக்டர் திரு. எஸ். ஜேசுதாசன் தெரிவித்தார்.

திரு.யேசுதாசன் மேலும் கூறியதாவது: மேலதிகாரிகளிடம் நல்ல பெயரெடுக்கவும் பிரயாணிகளிடம் பாராட்டைப் பெறவும், ஓட முடியாத பஸ்களை ஓட்டும்படி உத்தரவு போடுகிறுர்கள் இங்குள்ள டிப்போ அதிகாரிகள். இதனுல் கஷ்டப்படுவது சாரதியும், கண்டக்டரும் தான். உதிரிப் பாகங்கள் இல்லாத காரணத்தால் அதிகமான பஸ்கள் ஓட முடியாத நிலையில் உள்ளன. அந்த பஸ்களையெல்லாம்ஓட்டச் சொல்கிறுர்கள். பஸ் தொழிலாளர் சங்கங்கள் இது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நேரத்தை மிச்சம் பிடிக்க பஸ்களில் மிக நெருக்கமாக பிரயாணிகளைஏற்றச் சொல்கிருர்கள். பிரயாணிகளை ஏற்றிவிட்டு டிக்கட் எழுதும் போது, வழியில் டிக்கட் கொடுக்கவில்லையென எங்களைப் பிடிக்கிருர்கள். நாங்கள் அபராதம் செலுத்த வேண்டியநிலை ஏற்படுகிறது. புகையிரதத்தில் உள்ளது போல், டிக்கட் இல்லாது பிரயாணிகளுக்கே தண்டனை வழங்க வேண்டும். அப்படியானுல் தான் பிரயாணிகள் கேட்டு டிக்கட் வாங்குவார்கள்.

சேவையில் சேர்ந்து இரு வருடத்தில் பதவிஉயர்ச்சிப் பரீட்சை எடுக்கலாம் என்று இருந்ததை 5 வருடமாக உயர்த்திவிட்டனர். இதனுல் நாங்கள் பாதிக்கப்பட்டுள்ளோம். மீண்டும் 2 வருடமாக மாற்ற வேண்டும். யாழ்ப்பாணத்தில் நடந்த மே தினக் கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினுர்.

## இளைஞருக்கு கமத்தொழில் பண்ணை

பண்டத்தரிப்பு, வியாழன்

பண்டத்தரிப்புக் கோவில் பற்றுப் பகுதியில் வேலையற்றிருக்கும் இளைஞருக்கு தொழில் வசதி ஏற்படுத்தும் வகையில் கமத்தொழில் பண்ணை ஒன்றை நிறுவி வேலை வாய்ப்பு வழங்க பண்டத்தரிப்புப.நோ.கூ.ச.சமாஜம் தீர்மானித்துள்ளது. இதற்காக முத்தையன் கட்டு நீர்ப்பாசனத் திட்டத்தில் காணிகள் வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப் பட்டிருக்கிறதென்றும், வழங்கப்படும் காணிகளைச் சொந்தமாக்கும் வாய்ப்பும் இவற்றைப் பெறுவோருக்கு உண்டு எனவும் அறியப்படுகிறது.

இதில் சேரும் இளைஞருக்கு உணவு, வீடு, உபகரணங்கள் இவற்றிற்கு அரசாங்கம் பணம் வழங்கும். இதனை முன்னிட்டு பகிரங்க கூட்டம் ஒன்று நடாத்தவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

## கருவைக் கலைக்க அனுமதி வழங்கும் சட்டம்

### பாரதத்தில் கொண்டுவரப்படும்

பம்பாய், மே4

கருவைக்கலைக்க அனுமதி அளிக்கும் சட்டத்தைக் கொண்டுவரமத்தியஅரசாங்கம் முடிவு செய்துள்ளதாக இந்தியசுகாதாரமந்திரி திரு சந்திரசேகர் அறிவித்துள்ளார்.

'குழந்தை பிறப்பதைக் கட்டுப் படுத்துவதற்காகவே கருவைக்கலைக்க சட்டபூர்வமாக அனுமதிவழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது' என பம்பாயில் நடைபெற்ற குடும்பக்கட்டுப்பாடு ஆண்டு விழாவில் பேசிய திரு. சந்திரசேகர் தெரிவித்தார்.

இந்தியாவில் ஜனத்தொகைபெருகிக்கொண்டே வருகிறது. அதைக் கட்டுப்படுத்த எல்லோரும் பாடுபடவேண்டும். 3 குழந்தைகள்பிறந்ததும் உடனே முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். திருமணம்செய்ய முடிவு செய்திருப்பவர்கள் திருமணத்தை இன்னும் சிறிது நாட்களுக்கு தள்ளிப்போட வேண்டும்' என்றும் திரு. சந்திரசேகர் மேலும் கூறினுர்.

இப்போதுள்ள இந்தியசட்டப்படி கருவைக் கலைப்பது குற்றம்.

## காங்கிரஸ் பற்றி ஈ. வே. ரா.

சிதம்பரம், மே 4

'வீட்டில் குப்பைகள் சேருவதுபோல் காங்கிரஸில் அதன் லட்சியத்துக்கு மாருன கருத்துக்கள் உடையவர்கள் சேர்ந்துவிட்டார்கள், அதனுல் காங்கிரஸ் கெட்டுவிட்டது' என்று திராவிட கழகத் தலைவர் ஈ. வே. ரா. பெரியார் கூறியுள்ளார்.

சிதம்பரத்தில் தமிழ்நாடு சட்டமன்ற காங்கிரஸ் அங்கத்தவர் திரு. ஆர் கனகசபை பிள்ளைக்கு திராவிட கழகத்தினர் பாராட்டுக் கூட்டம் நடத்தினுர்கள். அதற்குத் தலைமை தாங்கிப் பேசுகையிலேயே ஈ. வே. ரா. மேற்கண்டவாறு கூறினுர்.

## கட்டுப்பாட்டு விலைக்குக் கிடைக்கும்

கொம்பனித்தெரு, வியா.

பல நூற்றுக்கணக்கான ஹோட்டல் சொந்தக்காரர்கள் தங்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களை கட்டுப்பாட்டுவிலைக்கு வழங்கவேண்டுமென்று உணவு இலாகாவைக் கோரியிருந்தனர். இவர்களுக்கு அடுத்த வாரத்திலிருந்து உணவுப் பொருட்கள் கட்டுப்பாட்டு விலைக்கு வழங்கப்பட இருக்கிறது. விண்ணப்பித்திருந்தவர்களுக்கே முதலில் பொருட்கள் கிடைக்குமெனவும் விண்ணப்பிக்காத மற்றைய ஹோட்டல் சொந்தக்காரர்களுக்கும் விரைவில் கட்டுப்பாட்டுவிலைக்கு உணவுப் பொருட்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரியவருகின்றது.

## லெனின் சமாதானப் பரிசு பெற்றவர்கள்

மாஸ்கோ, மே 4

நாடுகளுக்கிடையில் சமாதானத்தை வளர்ப்பதற்கான சர்வதேசிய லெனின் சமாதானப் பரிசுகள் [1966-ம் ஆண்டுக்கானவை] பின்வருவோருக்கு வழங்கப்பட்டுள்ளன.

மார்டின் நியேமோலர், மதகுரு, பொதுஜனத் தலைவர் [ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு] ஏப்ரஹாம் பிசர், வழக்கறிஞர், பொதுஜனத்தலைவர் [தென் ஆபிரிக்கக் குடியரசு], டேவிட் அல்பரோஸ் குவரஸ், ஓவியர் பொதுஜனத் தலைவர் [மெக்ஸிக்கோ] இவான் மாலெக், அறிஞர், பொதுஜனத் தலைவர் [செக்கோஸிலவாக்கியா], ரொக்வெல்கென்ட், கலைஞர், பொதுஜனத்தலைவர் (ஐக்கிய அமெரிக்கா], ஹோபர்ட் வர்ன்கி, பொதுஜனத் தலைவர் [ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு]

ஐரோப்பிய பொதுச்சந்தை

## பிரிட்டனின் விண்ணப்பம் பற்றி விரிவான பரிசீலனை

### பிரெஞ்சு ஜனுதிபதி அறிவிப்பு

பாரிஸ், மே 4

'ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்ந்து கொள்வதற்கு விண்ணப்பித்துக்கொள்வதென செய்துள்ள முடிவுபற்றி விரிவான பரிசிலனை செய்ய வேண்டியிருக்கும்' என பிரெஞ்சு மந்திரிசபையிடம் ஜனுதிபதி டிகால் நேற்றுத்தெரிவித்தார்.

இதுசம்பந்தமாக 6 அங்கத்துவ நாடுகளும் பரிசிலனை செய்யும் என்றும் அவர் எடுத்துக்கூறினுர்.

இம்மாதம் 29-ம், 30-ம் திகதிகளில் ரோமில் நடைபெறவிருக்கும் இந்த ஆறு நாடுகளின் உச்சிமகாநாட்டில் பிரிட்டனின் விண்ணப்பம்பற்றி விபரமாக பரிசீலனை செய்யப்படும் என ஜனுதிபதி டிகால் மேலும் தெரிவித்தார்.

## தியாகராஜரின் 200-வது ஜயந்தி விழா

புதுடில்லி, மே 4

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் இருநூருவது பிறந்த நாள் விழாவைக் கொண்டாட அகில இந்திய றேடியோவும் சங்கீத நாடக அகடமியும் விரிவான ஏற்பாடுகள் செய்துள்ளன.

இந்திய றேடியோவில் இன்று முதல் 11ந் திகதி வரை விசேஷ நிகழ்ச்சிகள் ஏற்பாடாகியுள்ளன. 9 விதமான வழிபாடு முறைகளைப் பற்றிய தியாகராஜரின் கிருதிகளை 'நவவிதபக்தி' என்ற இசை நிகழ்ச்சியாக ஸ்ரீயேமணி சங்கரசாஸ்திரி தயாரித்துள்ளார்.

## 'கட்டாய இந்தி கூடாது நெடுஞ்செழியன் கருத்து

புதுடில்லி, மே 4

பாடசாலைகளில் இந்தி கட்டாய பாடமாக இருக்கக் கூடாது எனக் கல்வி அமைச்சர்கள் மகாநாட்டில் தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன் கூறினுர்.

''மாணவர்கள் ஒவ்வொருவரும் ஆங்கிலத்தைக் கற்க வேண்டியது அவசியம். எனவே ஆங்கிலத்தைக் கட்டாயபாடமாக இருக்க வேண்டும். ஆங்கிலத்தை ஒழிக்கும் திட்டத்தை நாங்களும் ஏற்கமுடியாது [illegible] கூறினுர்.

## 'சிமித்தை'க் கொல்லுங்கள்

### ஆபிரிக்க தேசிய இயக்கத்தின் கொதிப்பு

தாருஸலாம், மே 4

ரொடீஷியாவில் தடை செய்யப்பட்டுள்ள ஆபிரிக்க தேசிய இயக்கத்தின் ஒரு அங்கத்தவர், ரொடீசியப் பிரதமர் திரு. அயன் சிமித்கொலை செய்யப்பட வேண்டுமெனக் கூறியுள்ளார். பிரிட்டிஷ் பிரதமர் ரொடீஷியாவுக்கு விஜயம் செய்வாராயிருந்தால் அவரும் கொலை செய்யப்பட வேண்டுமென்றும் அந்த அங்கத்தவா தெரிவித்துள்ளார்.

திரு. பீட்டர் மிட்டாண்டுவா என்ற அங்கத்தவர் இவ்விதம் குறிப்பிட்ட பின்திரு. சிமித், திரு. வில்சன் போன்றவர்களது செய்கையால்தாம் கொலைகாரர்களாக மாற வேண்டியிருப்பதாக அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில் இலாகா பற்றி புகார்

கிளிநொச்சி, வியா.

தொழில் பகுதி இலாகாவை மூடி விடுவதால் அதிக நன்மை ஏற்படும் என்று வடக்கு யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் சமாஜ தலைவர் யாழ்ப்பாணம் தொழில் பகுதி பொறுப்பாளருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது: ஜனவரி மாதத்தில் நான்கு வேலையாட்கள் வேண்டுமென்று கடிதம் எழுதியிருந்தேன். ஆனால் இந்த நாலு பேர்களுடைய பெயர்களை அனுப்புவதற்கு தங்களுக்கு மூன்று மாதங்கள் வேண்டியிருந்தது. இதன் காரணமாக நாம் வேறு முறையில் வேலையாட்களை எடுக்க நேர்ந்துள்ளது. இச் சூழ்நிலையில் தொழில் இலாகாவினால் என்ன பயன்? ஆகையால் அதனை மூடி விடுங்கள்.

## தந்தை கண்டித்ததால் தற்கொலை

புதுக்குடியிருப்பு, வியா.

''எனது மகன் அடிக்கடி குடிபோதையில் வீட்டிற்கு வருவதுண்டு. நான் சிலசமயங்களில் அவரைக் கண்டித்ததுண்டு. நீ, குடித்தால் வீட்டுக்கு வரவேண்டாம்'' என்று கூறியிருக்கிறேன்'' என்று புதுக்குடியிருப்பைச் சேர்ந்த விஜயரத்தினம் [21 வயது] என்பவரின் மரண விசாரணையின்போது அவரது தகப்பன் செல்லையா கந்தையா சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

தகப்பன் வீட்டிற்கு மகனை வரவேண்டாமென்று கண்டித்ததன் காரணமாக அவர் வேலைக்குச் செல்வதாகக் கூறிவிட்டு பின்னர் வீடு திரும்பவில்லை என்றும் சில தினங்களின் பின்னர் அவரின் பிரேதம் அழுகிய நிலையில் கிணறு ஒன்றில் கண்டெடுக்கப்பட்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

தாயார் சாட்சியமளித்த பின்னர் மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## இளைஞன் தற்கொலை

இமையாணன், வியா.

பருத்தித்துறையைச் சேர்ந்த அழகையாவின் மகனான சிவராசா என்ற 21 வயதுடைய இளைஞர் பெற்றோருடன் ஏற்பட்ட தகராறு காரணமாகத் தற்கொலை செய்துகொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பெற்றோரிடம் இவர் பணம்கேட்டதாகவும் பெற்றோர் உடனே பணம் கொடுக்காததாலேயே அவர் நச்சுத் திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## நீருள் மூழ்கி சிறுமி மரணம்

இமையாணன், வியா.

சண்முகம் என்பவரது மகளான மூன்றுவயதுச் சிறுமி நீரில் மூழ்கி மரணமானார். சம்பவம்ஒன்றுவல்வெட்டித்துறையில்சண்முகத்தின்வீட்டில்உள்ளகிணற்றுத் தொட்டியில்நிரப்பிவைக்கபட்டிருந்த நீருள்மூழ்கியே மரணமானதாக அறிவிக்கப்பட்டது.

## சிரமதானம்

உரும்பராய், வியா.

உரும்பராய் மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் சென்ற வாரத்தில் ஊரெழு கணேஷவித்தியாசாலைமாணவர்கள்ஆசிரியர் திரு. சி. வைத்திலிங்கம் தலைமையில் சென்று சிரமதானமூலம் திருப்பணிவேலைகள் செய்தனர்.

ஊர்காவற்றுறை, புதன்

மண்கும்பானைச் சேர்ந்த அம்பலவாணர் தியாகராசாவின் மனைவி கத்திவெட்டுக் காயத்திற்குள்ளானதாகச் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து ஊர்காவற்றுறைப் பொலிஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## உற்பத்தியைப் பெருக்க குழு நியமனம்

முல்லைத்தீவு, வியா.

முல்லைத்தீவுப் பகுதியில் உணவு உற்பத்தியைக் கவனிக்கும்பொருட்டு ''முல்லைத்தீவு உணவு உற்பத்திற் குழு'' என்ற பெயருடன் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இதன் கடமைகள், நோக்கங்கள் பற்றி முல்லைத்தீவு விவசாயப் போதனாசிரியர் திரு. வ. விஜயரட்னம் எடுத்துக் கூறினார்.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்- திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை. காரியதரிசி- திரு. எஸ்.குகநேசன்.

நிர்வாகசபை உறுப்பினர்கள்-திரு. எம். எஸ். வஸ்தியாம்பிள்ளை, திரு. வி. மயில்வாகனம், என். சோமநாதன், எஸ். தனபாலசிங்கம், ஏ. சந்தியாப்பிள்ளை, ஏ.வி. அந்தோனிப்பிள்ளை' எஸ்.சிவகுரு.

## புதிய உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம், வியாழன்

குரும்பசிட்டி நலன்புரி சபையின் நான்காவது ஆண்டுப் பொதுக்கூட்டம், குரும்பசிட்டி கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் திரு. நா. இரத்தினம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு நா. இரத்தினம், உப தலைவர்: திரு. பொ. இராசநாயகம், செயலாளர்: திரு. க. பத்மநாதன், துணைச் செயலாளரும் பொருளாளரும்: திரு. இ. சத்தியமூர்த்தி, செயற்குழு உறுப்பினர்: திரு. த. வ. கதிர்காமத்தம்பி, திரு. ந சக்திதாசன், திரு க. சுப்பிரமணியம், திரு. பொ. பாலசுப்பிரமணியம், திரு. வே. த. புவனேந்திரன்

## '15 வருட 3-ம் தர சேவையாளரை 2-ம் தரத்துக்கு உயர்த்துக'

வெள்ளவத்தை, வியாழன்

இலங்கை தபால்-தந்திப் போக்குவரத்துப் பகுதியைச் சேர்ந்த தமிழ் அரசாங்க ஊழியர்களின் அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் ஆறுவது ஆண்டு பொதுக்கூட்டம் இம்மாத மத்தியில் நடைபெறவிருக்கிறது. புதிய நிர்வாக சபைத் தெரிவும் நடைபெறும். இதற்கான அலுவல் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்தல் கடந்த மாதத்துடன் முடிவடைந்தது. பெரும்பாலும் போட்டியின்றியே தெரிவுகள் நடைபெற முயற்சி எடுக்கப்பட்டு வந்தபோதிலும் சில பதவிகளுக்குக் கடுமையான போட்டி இருக்கும் என நம்பப்படுகிற.து

தபாலதிபர்களுக்குச் சேவையின் ஆரம்ப காலத்திலிருந்தே ஆண்டுச் சம்பள உயர்வு பத்து ரூபாவாக இருப்பதைப் போன்று தபாற்பகுதி எழுதுவினைஞர் சேவையிலும் மூன்றுவது தரத்திலுள்ள எழுதுவினைஞர்களின் ஆண்டுச் சம்பள உயர்வு தற்போதுள்ள ஆறு ரூபாவிலிருந்து பத்து ரூபாவாக உயர்த்தப்படவேண்டும் என்றும், பதினைந்து ஆண்டுகள் தொடர்ந்து மூன்றுந்தர எழுதுவினைஞர்களாக இருப்பவர்களுக்கு இரண்டாந்தர உயர்ச்சி கொடுக்கவேண்டும் என்றும் கோரும் பிரேரணைகளை ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கொண்டுவருவதற்குப் பிரதம தபாற்கந்தோரின் காசுக் கணக்குப் பகுதியைச் சேர்ந்த புதிய ஊழியர் திரு. க. பேரம்பலம் சங்கச் செயலாளருக்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

தபாலதிபர்கள், தந்தியாளர்கள் சேவையையும் தபாற்பகுதி எழுதுவினைஞர்கள் சேவையையும் சேவை மூப்பு பாதிக்காத வண்ணம் ஒன்று சேர்க்கும்படி கோரும் பிரேரணையையும் இவர் கொண்டுவரவிருக்கிறார்.

## இளைஞர் கழகம்

உடுப்பிட்டி, வியா.

குருநகர் இளைஞர் கழகத்தின் மாதாந்தக் கூட்டம் திரு. ஜே. எப். மரியநாயகம் தலைமையில் நடைபெற்றது. கழகத்தின் ஒவ்வொரு அங்கத்தவர்களும் தங்களுடையசெலவில் கழக வாசிகசாலைக்குப் பத்திரிகைகள், புத்தகங்களை வழங்குவதாகத் தெரிவித்தனர்

## கண்டனக் கூட்டம்

புன்னாலைக்கட்டுவன், வியா

வல்வெட்டித்துறையில் நடைபெற்ற பொலிஸ்-இராணுவ அட்டூழியங்களைக் கண்டிக்கு முகமாக இம் மாத நடுப்பகுதியில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (பீகிங் சார்பு) ஒரு கண்டனப் பொதுக் கூட்டத்தை நடாத்தவிருக்கிறது.

திரு.என்.சண்முகதாசன், கம்பகா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா ஆகியோர் இதில் கலந்து கொள்வார்கள்.

## புதிய அதிபர் இல்லை

புன்னாலைக்கட்டுவன், வியா

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. கே. பூரணம்பிள்ளை ஓய்வுபெற்றபின் புதிய அதிபர் ஒருவரை நியமிக்கும் உத்தேசத்தைக் கல்வித் திணைக்களம் தற்காலிகமாகக் கைவிட்டுள்ளது எனவும் தொடர்ந்து பதில் அதிபர் திரு. ஆர். எம். குணரத்தினமே அதிபராகக் கடமையாற்றுவார் எனவும் நம்பப்படுகிறது.

## சூசையப்பர் திருநாள்

பண்டத்தரிப்பு, வியாழன்


மே தினத்தை யொட்டி இளவாலை புனித சென் ஜேம்ஸ் ஆலயத்தில் தொழிலாளர் பாதுகாவலராகிய புனித சூசையப்பர் திருநாள் கொண்டாடப் பட்டது.


# ஜம்போவின் புதையலைக் கணக்கிட்டு கவர்ச்சியான பரிசுகளைப் பெறுங்கள்

ரூபா 5000 பரிசுகள்




மற்றும் பல கவர்ச்சிகரமான பரிசுகள்




## மாபெரும் செய்தி

ஜம்போ தனக்குத் தேவையான புரோடென்ற் பற்பசையை சேகரித்து வைத்துக் கொள்ளுவதில் ஒரு போதும் தவறுவதில்லை. அவர் ஏராளமாக அடுக்கி வைத்திருப்பதை நீங்கள் இங்குகாண்கிறீர்கள்.

ஆக நீங்கள் செய்ய வேண்டியது ஜம்போ நிணித்து வைத்திருக்கும் புரோடென்ற் பெட்டிகள் எத்தனை என்பதை கவனமாக, சரியாக எண்ணி கீழுள்ள பிரவேசப்பத்திரத்தில் குறிப்பிட வேண்டியதுதான்.

பிரவேசப் பத்திரத்தின் எஞ்சிய பகுதியை நிரப்பி அத்னை வெற்று புரோடென்ற் அட்டைப் பெட்டியுடன் 1967 மே மாதம் 31ம் திகதிக்குப் பிந்தாமல் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள்.

புரோடென்ற் கொண்டு பல் துலக்குங்கள். வாயில் அற்புத உணர்ச்சி பெறுங்கள்.



புரோடென்ற்:
த. பெ. 1340 கொழும்பு.

எத்தனை பிரவேசப் பத்திரங்களையும் அனுப்பலாம். ஆனால் பூர்த்தியான ஒவ்வொரு பத்திரமும் ஒரு புரோடென்ற் அட்டைப் பெட்டியுடன் அனுப்பப்படல் வேண்டும்.

இப்போழுது சந்தையில் 3 அளவுகளில் இது உண்டு. இவற்றில் எதையும் அனுப்பலாம். 3 வி எனக் குறிக்கப்பட்ட குடும்ப அளவு அட்டைப் பெட்டி உங்களிடம் உண்டானால் அத்தோடு நீங்கள் மூன்று பிரவேசப் பத்திரங்களை அனுப்பலாம்.

மிகவும் துப்புரவான, கவர்ச்சியான, சரியான பிரவேசப் பத்திரங்களுக்கு ஒழுங்கு முறைப்படி பரிசுகள் வழங்கப்படும்.

போட்டி நிபந்தனைகளுக்கு அமைய ஆகக்கூடுதலான பிரவேசப் பத்திரங்களை அனுப்பும் போட்டியாளருக்கு ஒரு விசேட பரிசு காத்திருக்கிறது.

டி. ஏ. அபெயசிங்க அன் கம்பெனி மற்றும் மாஸ்ரேர்ஸ் அட்வெர்டைசிங் ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தினரும் போட்டியில் பங்குபற்ற உரிமையுடையவராகார்.

இப்போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களுக்கும் நீதிபதிகளின் முடிவே இறுதியானதும் சட்டப்படி கட்டுப்படக் கூடியதுமாகும்.

பிரவேசப் பத்திரம்.

ஜம்போ வசமுள்ள புரோடென்ற் பெட்டிகளின் தொகை.

பெயர்......................................

விலாசம்......................................

......................................

வியாபாரியின் பெயர்......................................

வியாபாரியின் விலாசம்......................................

......................................

உங்கள் பிரவேசப் பத்திரத்துடன் வெற்றுப் புரோடென்ற் அட்டைப் பெட்டி அனுப்ப மறக்க வேண்டாம்

**புரோடென்ற்** உங்கள் வாயில் ஓர் அற்புதம்.

DAA 6-67-MASTERS


1764 6X7"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம் 17ம் பிரிவின்படியான அறிவித்தல்

என் 1029 கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் [அத்தியாயம் 257] 17 [5] ம் பிரிவின் 1961ம் ஆண்டு திருத்தப்படியான 60ம் இலக்கப் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைக்கொண்டு, யாழ்ப்பாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர், சிவசுப்பிரமணியம் சின்மயானந்தகுரு மாணிக்கவாசகர் ஆகிய நான் இதன் அட்டவணைப் பத்தி Iல் குறிக்கப்பட்டுள்ள கிராமச் சபையின் கூட்டத்தை அந்த அட்டவணைப் பத்தி IIல் உள்ள ஏற்ற பதிவில் குறிப்பிட்டுள்ள திகதியில் அந்த அட்டவணையின் பத்தி IIIல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையின் பத்தி IVல் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

சி. சி. மாணிக்கவாசகர்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சி அமைச்சு,
யாழ்ப்பாண அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

## அட்டவணை

| பத்தி I | பத்தி II | பத்தி III | பத்தி IV |
| --- | --- | --- | --- |
| கிராமச் சபையின் பெயர் | திகதி | நேரம் | இடம் |
| நாவற்குளி [கைதடி] | 13-5-67 | காலை 10-00 | கிராமச்சபை அலுவலகம், நாவற்குளி [கைதடி] |

2×5

2817

## இலங்கை வெசாக் சுற்றுலா

1×2

பஸ் மூலம் ஆரம்பம். 20-5-67 முதல் 30-5-67 வரை. பெண்களுக்குத் தனி யிடம். விபரங்களுக்கு:

நேஷனல் சேவிஷஸ் ஒவ் சிலோன்,
1/2, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

1768

## கேள்வி விளம்பரம்

1. வெள்ளுருவை யடி ரோட்டு வேலை.
2. பூசாரிபில ஒலுமடு கமவெளி ரோட்டு வேலை.
3. புதுக்குடியிருப்பு சந்தைக் கட்டிடம்.

ஆகிய வேலைகளுக்குப் புதுக்குடியிருப்பு கி. ச. தலைவரால் ரூபா 5000/-க்கு மேல் பதிவு செய்த ஒப்பந்தக்காரரிடமிருந்து 20-5-67 காலை 10 மணிவரை பதிவுசெய்த கேள்விகள் ஏற்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் எடுப்பவர்கள் 1வதுக்கு கேள்விக் காசு ரூபா 80-ம், பத்திரக் காசு ரூபா 16/-ம், 2வதுக்கும், 3வதுக்கும் கேள்விக் காசு ரூபா 50/- வீதமும், பத்திரக் காசு ரூபா 10/- வீதமும் 20-5-67க்கு முன் கட்டிப் பெற்றுக்கொள்ள வேண்டும். பத்திரக் காசுகள் திருப்பிக்கொடுபடமாட்டாது.

1×6

விபரங்களை வவுனியா உ. உ. ஆணையாளரின் கந்தோரிலும், இச் சபைக் கந்தோரிலும் வேலை நேரங்களில் அறியலாம்.

சி. சிதம்பரப்பிள்ளை,
கி. ச. தலைவர்,
புதுக்குடியிருப்பு,
2-5-67 முல்லைத்தீவு.
1767

## கொழும்பில் வள்ளுவர் தினம்

வெள்ளவத்தை, வியாழன்
திருவள்ளுவர் நினைவு தினத்தை வெகு விமரிசையாகக் கொழும்பில் கொண்டாடுவதெனத் தமிழ் அரசாங்க ஊழியர்கள் தீர்மானித்துள்ளனர். கொழும்பு சைவ மங்கையர்களும் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்தில் கொண்டாடவிருப்பதாகத் தெரிகிறது.

# அறிவித்தல்

திரு. எஸ். மண்டலாயும், திரு. வி. வேலாயுதப்பிள்ளையும் எங்கள் சேவையிலிருந்து 1-5-67-ம் திகதி தொடக்கம் விலகிக் கொண்டதை பொது ஜனங்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்ளப்படுகிறது. மேற்கொடுக்கப்பட்ட திகதியிலிருந்து எங்கள் சார்பில் அவர்களால் செய்துகொள்ளும் அல்லது அவர்களுடன் செய்து கொள்ளும் எந்தத் தொழில் சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்களுக்கும் நாங்கள் ஜவாப்தாரிகளாக மாட்டோம்.

ராஜா கார்ப்பொரேஷன்
கண்டி ரோடு,
பரந்தன்.

1769

## இலங்கை ஒலிபரப்பு கூட்டு ஸ்தாபனம்

### வெள்ளி 5-5-67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 தோத்திரப்பாடல்கள் — நாகபூஷணி தணிகாசலம், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 தொழிலாளர்வேளை.

இரவு 6-15 பஜனை, 6-45 தொழிலாளர்வேளை, 7-15 முத்திநெறி — சைவசஞ்சிகை, 7-45 திருமுறை வகுப்பு — கே. இராசசேகரம், 8-00 முஸ்லீம்நிகழ்ச்சி, 9-30 பாட்டு — வி. கே. நடராசா, 10-15 [illegible] இசை.

# வடமராட்சி விளையாட்டுப் போட்டி முடிவுகள்

இமையாணன், வியாழன்
வடமராட்சிப் பகுதி முழுவதுக்குமென தொண்டமனாறு விக்னேஸ்வரா உடற்பயிற்சிக்கழகம் தொண்டமனாறு சின்னக் கடற்கரை மைதானத்தில் ஒரு விளையாட்டுப்போட்டியை நடாத்தியது. இவ்விளையாட்டுப்போட்டியில் காலை நிகழ்ச்சிகளாக 25 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியும், 10 மைல் மரதன் ஓட்டப் போட்டியும் நடைபெற்றன. பிற்பகல் நிகழ்ச்சிகளாக 4 மைல் கட்டுமர ஓட்டப்போட்டியும் 3 மைல் நீச்சல் போட்டியும் நடைபெற்றன. இரவு நிகழ்ச்சிகளாக வடமராட்சி ஆணழகன் தெரிவும், மல்யுத்தச் சுற்றுப்போட்டிகளும், கம்பு இழுத்தற் போட்டியும், பேச்சுப்போட்டியும் நடைபெற்றன.

வடமராட்சியின் சிறந்த மல்யுத்த வீரனாக ப. பரமானந்தனும், ஆணழகனாக மேற்பிரிவில் ரி. வரதராஜாவும், கீழ்ப்பிரிவில் அருமைச் சந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

சைக்கிள் ஓட்டம்: ப. நவரத்தினம், கே. பரமேஸ்வரன், ஆர். ரத்தினம்.

மரதன் ஓட்டம்: வாமனானந்தன், என். ராசரத்தினம், எஸ். சாம்பசிவமூர்த்தி.

நீச்சல்: என். அருமைச் சந்திரன், இ. பூபாலசிங்கம், எஸ். துரைசாமி.

மல்யுத்தம்: பி பிரிவு- வி. பரமானந்தன், சி பிரிவு- கே. நல்லதம்பி. டி பிரிவு- எம். நவசோதி. ஈ பிரிவு- திருநாவுக்கரசு.

கம்பு இழுத்தல் போட்டி: அருச்சுனராசா.

பேச்சுப் போட்டி: க. மனோகரன்.

## ச. ச. நிலையம் வெற்றி

சுழிபுரம், வியாழன்
சங்கானை மேற்கு சனசமூக நிலைய விளையாட்டுக் கோஷ்டிக்கும், பனிப்புலம் அம்பாள் சனசமூக நிலைய விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையே சிநேகபூர்வமாக நடைபெற்ற கரபந்தாட்டப்போட்டியில் சங்கானை மேற்கு சனசமூகநிலையத்தினர் வெற்றி பெற்றனர். சங்கானை மேற்கு சனசமூக நிலையத்தினர் 14 — 2, 14 — 9 ஆகிய புள்ளிகளைப் பெற்று முதல் இரண்டு ஆட்டங்களிலும் அமோக வெற்றி பெற்றனர். போட்டி சங்கானை மேற்கு சனசமூக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. திரு. செ. மகேந்திரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## கூட்டுறவு பண்டகசாலை

அச்சுவேலி, வியாழன்
அச்சுவேலியைச் சேர்ந்த பத்தை மேனிப்பகுதியில் விரைவில்கூட்டுறவு பண்டகசாலைநிறுவப்படவிருக்கிறது.


MANOHARA
Jaffna
Daily at 4-45, 7-00, 9-45
Clint Eastwood
Marianne Kock
in
Fistfull of Dollars
Technicolor-Techniscope

REGAL - JAFFNA
Time: 4-45, 7-00 p. m.
633 SQUADRON
9-45 P. M.
SHENAI
[Hindi]


## குருபூசை

நல்லூர் இந்துமாமன்றத்தின் சார்பில் திரு. வ. கந்தசாமி தலைமையில் திருநாவுக்கரசுநாயனார் குருபூசை விழா நடைபெற்றது. திவ்விய ஜீவன சங்கத்தாரின் பஜனையுடன் விழா ஆரம்பித்தது. திரு. வே. சண்முகலிங்கம், திரு. க. செல்லத்துரை, திரு. கே. துரைராசசிங்கம் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

## கல்வி

வகுப்புகள்
ஜி. சி. ஈ. உயர்தரம் கலை/வர்த்தகம் விசேட பட்டதாரி ஆசிரியர்களால் வகுப்புகள் நடாத்தப்படும். விடுதி வசதிகள் உண்டு. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி/107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1965

## WANTED

Wanted Female Typist-clerk preferblly with book-keeping knowledge. Apply in writing before 10-5-67. Advt. No. 1975, C/o Eelanadu, Jaffna, 1975


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
ஜெய்சங்கர் - K. R. விஜயா
நடித்த
பெண்ணே நீ வாழ்க!

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெமினி—சாவித்திரி
நடித்த
வல்லவனுக்கு
வல்லவன்


# வரிவிளம்பரம

## தேவை

நெசவாளர்
நெசவு வேலையில் அனுபவம் வாய்ந்த பெண்கள் தேவை. கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். வ. நவரத்தினம், கருணு நெசவுநிலையம் வீமன்காமம், தெல்லிப்பளை.
1968

பால்பண்ணையாளர்
வலி. வடக்கு பாற்பண்ணைக்கு கேப்பை மாட்டில்பால் எடுக்க அனுபவமுள்ள ஒருவர்தேவை. தகுந்த சம்பளம், சாப்பாடுவசதி, இருப்பிடவசதி யெல்லாம்செய்து கொடுக்கப்படும், நேரில் விண்ணப்பிக்கவும். தலைவர்.
1973

## விற்பனைக்கு

காணி
ஏழாலை தெற்கு சுன்னுகம் எல்லையில் மயிலன்காட்டு ரோட்டிலுள்ள 3பரப்பு6குழி தோட்டக்காணி வீடுகட்ட வசதியுள்ள மின்சாரவசதியுடனுண்டு. விபரத்துக்கு: வே. சிவசிதம்பரம், சூராவத்தை சுன்னுகம். தொடர்புகொள்ளவும். 1972

வீடு:
நல்லூர் கந்தசாமி கோவிலிலிருந்து 300 யாருக்குள் 169 இலக்கம், கோவில் தெருவில், நான்கு பரப்புக் கொண்ட வளவுக்குள் சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்குண்டு விலை விபரம், உறுதி பற்றி. விற்பனைக் கொமிசனர் கோண்டாவில் திரு. S. இரத்தினசபாபதி J. P. உடன் தொடர்பு கொள்ளுக.
1977

கார்
E Y சிறிஸ் A40 [டெவன்] கார் உடன் விற்பனைக்கு உண்டு. தொண்டமானுறு பெற்ரோல் நிரப்பு நிலையத்தில் பார்வையிடவும். 1976


கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை] விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] நவா [கொம்பனித்தெரு] மொடேர்ன் [பண்டாரவளை]

நாளை முதல்
வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]

ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
ரங்கராவ் - நாகேஷ்
ஆர். சரஸ்வதி,
மனோகர்,
சீதாலட்சுமி,
மாதவி,
கள்ளபார்ட்
நடராஜன்
திறம்பட நடித்து
தென்னகமெங்கும்
100 நாட்களுக்கு
மேல் ஓடிய
வெற்றிச் சித்திரம்.



ஈ. வி. ஆர். பிக்சர்ஸ்
குமரிப் பெண்
இசை:
எம். எஸ். விஸ்வநாதன்
டைரக்ஷன்
ராமண்ணு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிசார் என் தலையிலும்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
ஸார் 'ஜீப்'வண்டியிலிருந்து இறங்கி கூட்டத்தில் இருந்தவர்களைக் குண்டாந்தடிகளால் தாக்கினர். அந்நேரத்தில் கூட்டத்தில் இருந்தவர்கள் அங்குமிங்குமாக ஓடிச்சென்றனர்.

அப்படி ஓடிச் சென்ற கூட்டத்தவர்களில் ஒரு பகுதியினர் மேடையை நோக்கியும் வந்தனர். அதனுல் மேடையில் நெருக்கடி ஏற்பட்டது. அந்நேரத்தில் பருத்தித்துறை எம். பி. க. துரைரத்தினம், பட்டினசபைத் தலைவர் திரு.வி. இரத்தினவடிவேலு, திரு.எஸ். ஞானமூர்த்தி மற்றும் சிலரும் என்னுடன் நின்றனர். எம்.பியும் நானுமாக, "கூட்டத்தில் இருந்தவர்களை ஏன் தாக்குகிறீர்கள் நிறுத்துங்கள்" என பொலிசாரைக் கேட்டோம். அப்பொழுது எனது பெயரைச் சொல்லி யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது. அப்போது என்னைப் பாதுகாப்பாக நிற்கும்படி தான் யாரோ என் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவதாக அறிந்து, நான் அதனைப் பொருட்படுத்தவில்லை. கூட்டத்திய் இருந்தவர்கள் சேதுநாராயணசாமி கால் முறிந்து நிலத்தில் விழுந்துகிடப்பதாகச் சொன்னுர்கள். நானும் பட்டின சபைத் தலைவரும் சேது நாராயணசாமி விழுந்த இடத்திற்குப் போய் அவரை தூக்க முயற்சிக்கையில் எனக்குக் கிட்ட வந்து பொலிசார் குண்டாம் தடியால் அடித்தார்கள். உடனே எனக்கு தலையிலும், இடது காலிலும் காயம் ஏற்பட்டது. பொலிசார் அடித்துக் கொண்டிருக்கும் போது இராணுவ சிப்பாய் ஒருவர் வந்து எனது பின்பக்கத்தில் குத்தினுர். நான் இடனே சந்தைப்பக்கமாகஓடி ஒரு வீட்டினுள் தஞ்சம் புகுந்தேன். அவ்வீட்டில் நின்ற நேரத்தில் வெடிச்சத்தம் சனசமூக நிலையப்பக்கமாகக் கேட்டது. பின்னர் எனது காயத்திற்காக உடனே மந்திகை ஆஸ்பத்திரிக்கு சிகிச்சை பெறுவதற்காகப் போய்விட்டேன்.

**இராணுவ ஜீப் இரண்டு வந்தன**

வி. இரங்கநாதன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

நான் வல்வெட்டித்துறையில் வசிக்கிறேன். சம்பவம் நடைபெற்ற தினம் வல்வெட்டித்துறை சனசமூக நிலையத்தில் நடந்த கூட்டத்தைப் பார்க்க நானும் போயிருந்தேன். அந்நேரத்தில் பொலிசார் வந்து கூட்டத்தில் இருந்தவர்களை அடித்தார்கள். கூட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்த நானும் இருந்த இடத்தைவிட்டு எழுந்து ஓடினேன். நான் ஓடிய பக்கம் காங்கேசன்துறை வீதிப் பக்கமாகும். நான் கூட்டத்திலிருந்து ஓடும்போது காங்கெசன்துறை வீதிப் பக்கங்திலிருந்து இரண்டு இராணுவ ஜீப் வண்டி இராணுவ வீரர்களுடன் வந்து கூட்டத்தில் இருந்தவர்களையும் அடித்தனர். காங்கேசன்துறை வீதிப் பக்கமாக ஓடிய நான் பருத்தித்துறை வீதிப்பக்கமாகவிருக்கும் எனது வீட்டிற்குப் போவதற்காக திரும்பி சந்திப் பக்கமாக வந்து பருத்தித்துறைவீதிப் பக்கமாக இருக்கும் எனதுவீட்டிற்குப் போக முயற்சித்தேன். அப்பொழுது சந்திப் பக்கமாக வெடிச் சத்தம் கேட்டது. நான் பயந்து அருகில் இருக்கும் கடைக்குள் புகுவதற்கு முயற்சித்தேன். அந்நேரத்தில் கடை பூட்டப்பட்டுவிட்டது. அதே நேரத்தில் வெடியொன்று எனது வயிற்றை உராய்ந்து கொண்டு அப்பால்சென்றது வெடிபட்டதால் எனக்கு வயிற்றில் காயம் ஏற்பட்டது. சிறிது நேரத்தில் எனக்கு மயக்கம் ஏற்பட்டது. உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டேன். அங்கு என்னை டாக்டர் பரிசோதனை செய்தார்.

வல்வை மக்கள் சார்பில் அட்வகேட் கே. மோதிலால்நேரு, வழக்கறிஞர்கள் திரு. கே. இரத்தினசிங்கம், திரு. என். நடராசா, திரு. சண்முகரத்தினம் ஆகியோர் ஆஜரானுர்கள்.

பொலிஸ் சார்பில் ஏ. எஸ். பி. தவராசா, இன்ஸ்பெக்டர்திரு. இராமநாதன் ஆகியோர் ஆஜரானுர்கள்.

மேல் விசாரணை இம் மாதம் 7-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1967-ம் ஆண்டு மே மாதம். 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## காரின்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
ந்து அவர் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

**கைது செய்ய உத்தரவு**

மரணமானவரைக் கொலை செய்தவர் எனச் சொல்லப்படும் கணபதி கிருஷ்ண பிள்ளை என்பவர் இன்னமும் கைது செய்யப்படவில்லை. இவரைக் கைது செய்யுமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் நேற்று நள்ளிரவு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இக் கொலை சம்பந்தமாக வடமாகாண உதவி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சி. தவராஜாவும், குற்றத் தடுப்புப் பகுதி இன்ஸ்பெக்டர் திரு. மெண்டிஸும் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். கொலை செய்யப்பட்டவர் மரணமான போது அணிந்திருந்ததாகச் சொல்லப்பட்ட "ஷேர்ட்" காணுமல் போய்விட்டதாகப் பொலிஸாருக்குச் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து, பொலிஸார் நடத்திய விசாரணையின்பின்னர் அந்த 'ஷேர்ட்' யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலுள்ள "வார்ட்" ஒன்றின் குளிக்கும் அறையிலிருந்து பொலிஸார் நேற்று மாலை கண்டு பிடித்தனர். சம்பந்தப்பட்ட 'ஷேர்ட்'டின் பின்புறத்திலும் கத்தியால் குத்தப்பட்ட ஒரு துவாரம் இருந்த போதிலும், 'ஷேர்ட்டில்' இரத்தைக் கறை எதுவுமின்றி அது கழுவப்பட்ட நிலையில் இருந்ததாம்.

[ந. நி]

## போதியளவு...

[1-ம்பக்கத் தொடர்ச்சி]
முறையில் பதிவுசெய்யமுடியாதநிலையில் இருப்பதாகவும், இதனுல் தமிழ் மட்டும் தெரிந்த பொதுமக்கள் மிகவும் கஷ்டமடைவதாகவும், இதுபற்றி அண்மையில் சில தமிழ் எம். பி.க்கள் வடமாகாணப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்திடம் நேரில் தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகிறது. ந. நி.

## மந்திரிசபை கூட்டம்

கொழும்பு, வியாழன்

இன்று மந்திரிசபை கூடி அரசாங்க இலாகாக்களுக்கான உபமான்யங்கள்பற்றி ஆலோசித்தது.

## சுவீப்முடிவுகள்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி[

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 24 | T | 0919 | 18 | L | 0172 |
| 16 | S | 0512 | 15 | L | 0516 |
| 21 | P | 0838 | 26 | S | 0215 |
| 05 | M | 0329 | 06 | R | 0768 |
| 17 | A | 0677 | 17 | K | 0761 |
| 18 | Q | 0294 | 03 | L | 0490 |
| 19 | L | 0326 | 34 | T | 0549 |
| 15 | Q | 0379 | 11 | R | 0076 |
| 13 | W | 0711 | 12 | C | 0823 |
| 03 | J | 0089 | 23 | Y | 0612 |
| 01 | Q | 0412 | 37 | H | 0429 |
| 12 | O | 0370 | 24 | J | 0301 |
| 37 | M | 0073 | 18 | F | 0176 |
| 30 | Y | 0922 | 30 | Q | 0725 |
| 18 | J | 0757 | 02 | N | 0030 |
| 16 | J | 0042 | 07 | G | 0866 |
| 18 | D | 0141 | 12 | G | 0828 |
| 23 | O | 0690 | 22 | R | 0039 |
| 08 | L | 0492 | 22 | S | 0414 |
| 10 | V | 0759 | 27 | T | 0203 |
| 35 | Q | 0866 | *08 | E | 0306 |
| 10 | J | 0464 | 23 | X | 0363 |
| 14 | T | 0829 | 01 | F | 0353 |
| 38 | N | 0184 | 21 | B | 0029 |
| 08 | V | 0055 | 07 | E | 0221 |
| 28 | S | 0742 | 28 | E | 0760 |
| 25 | J | 0644 | 29 | U | 0235 |
| 08 | P | 0069 | 14 | A | 0548 |
| 30 | W | 0115 | 30 | Q | 0986 |
| 21 | C | 0890 | 03 | S | 0348 |
| 34 | W | 0559 | 28 | L | 0317 |
| 05 | U | 0460 | 16 | O | 0718 |
| 35 | K | 0176 | 08 | S | 0648 |
| 25 | G | 0397 | 01 | Y | 0210 |
| 11 | C | 0515 | 13 | E | 0692 |
| 35 | P | 0256 | 12 | G | 0966 |
| 37 | K | 0860 | 26 | P | 0685 |
| 19 | H | 0655 | 10 | G | 0545 |
| 22 | P | 0843 | 07 | Y | 0325 |
| 15 | K | 0091 | 17 | S | 0546 |
| *01 | U | 0577 | 28 | E | 0327 |
| 04 | Z | 0977 | 38 | J | 0290 |
| 02 | J | 0692 | 03 | B | 0335 |

[இவை உறுதிப்படுத்தப்படவேண்டும். * அடையாளமிடப்பட்டுள்ள இலக்கங்களில் உள்ள E, U எழுத்துக்கள், எமக்குக் கிடைத்த சுவீப் முடிவு அச்சுப் பிரதிகளில் தெளிவில்லாதிருப்பத்தால் அவை B, H ஆகிய எழுத்துக்களாகவும் இருக்கலாம். அவைபற்றிய சரியான முடிவுகளை நாளை பத்திரிகையில் காண்க.]

## சப் இன்ஸ்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
பொலிஸ் நிலையத்துக்குப் புகார் ஒன்று செய்வதற்காகச் சென்ற 17 வயது இளம் பெண்ணுன பார்வதி என்பவரைத் தனியாக விசாரணை செய்வதற்காக 'ஜீப்' ஒன்றில் அழைத்துச் சென்று பார்வதிமீது பெரேரா பலாத்காரம் பிரயோகித்ததாக வடமாகாண பொலிஸ் அதிபரிடம் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்ட பெரேரா றிமாண்டில் வைக்கப்பட்டு வவுனியா மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபின்னர் 1,000 ரூபா பிணையில் விடுதலைசெய்யப்பட்டு, மீண்டும் இன்று காலை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டிருந்தார்.

பதில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் உத்தரவின்பேரில் தற்காலிக வேலைநீக்கஞ் செய்யப்பட்டிருக்கும் திரு. பெரேராவும், பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டபோது அந்த 'ஜீப்'பில் சென்றதாகப் புகார்செய்யப்பட்ட வவுனியாப் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் அபயக்கூனும் அடையாள அணிவகுப்பின்போது சம்பந்தப்பட்ட பார்வதியினுல் அடையாளம் காட்டப்பட்டது தெரிந்ததே.

வடமாகாணப் பொலிஸ் அதிபரின் பேரில் பார்வதி மீது பலாத்காரம் பிரயோகித்தாரெனப் பெரேரா மீது குற்றஞ்சாட்டி மன்னுர் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. அபயசேகரா இன்று வவுனியா மாஜிஸ்திரேட் முன்னிலையில் வழக்குத் தாக்கல்செய்ய இருக்கிறார்.

# கோயிலுக்குச் செல்லும்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
லையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில்66-ம் ஆண்டு மே மாதம் 18-ந்திகதி மூளாயில் சுப்பர் முருகேசுவை சுப்பன் கணபதியும், கணபதி தெய்வேந்திரனும் கொலைசெய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. விசாரணையைப் பார்ப்பதற்காக கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானேர் திரண்டிருந்தனர்.

எதிரிகள்சார்பில் அட்வக்கேட் பி. இரகுபதி புறக்டர் ஏ.குலநாயகத்தின் அனுசரணையுடன் ஆஜரானுர். எதிரிகளுக்காக வழக்கறிஞர் எஸ். தில்லையர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார்.

செல்லம் சாட்சியமளித்த போது மேலும் கூறியதாவது: கணவனுடன் நான் அன்று கோவிலுக்குச்செல்லவில்லை. கோவிலுக்குச் செல்லும்போது வழியில் அவர் என்ன குடித்தார் என்று எனக்குத் தெரியாது. அதேபோல் கோயிலால் திரும்பிவரும் போதும் வழியில் என்ன குடித்தார் என்று எனக்குத் தெரியாது. கோவிலுக்குப்போகும்போது கள்ளுக்குடிக்காமல் பயபக்தியாக போவார்.

வழ: கோவிலால் திரும்பி வந்து கள்ளு. தேநீர் குடிக்கலாமா?- [மௌனம்]

நீதியரசர்: கோவிலால் வந்து கள்ளு குடிப்பது சமய ஆசாரத்திற்கு மாறுனதா?- அன்று வந்து குடிக்கவில்லை.

வழ: கேட்ட கேள்விக்கு வேறு மறுமொழி சொல்ல வேண்டாம். ஆட்டைப் பலி கொடுக்க செல்லும்போது கள்ளுக்குடிப்பது சமயத்திற்கு மாறுனதுதானே?- அன்று அவர் குடிக்கவில்லை.

வழ: கோவிலுக்கு செல்லுமுன் கள்ளுகுடிப்பது வழமையானதா?- வழமையாககுடிக்கிறவர்தான். அன்று குடிக்கவில்லை.

வழ: கோவிலுக்கு செல்லுமுன் கள்ளு குடிப்பது சமய ஆசாரத்திற்கு மாறுனது?- ஆம்.

வழ: கோவிலுக்குப்போய் கும்பிட்ட பின் வீடுவந்தால் கட்டுப்பாடு கிடையாது. கள்ளு சாராயம் ஆட்டிறைச்சி சாப்பிடலாம்?- அன்று கோப்பி குடித்தார். இல்லை தண்ணீர் தான் குடித்தார்.

வழ: முதலில் தேநீர் என்ருய் பின் கோப்பி, இப்போ தண்ணீர் என்கிருய், எது உண்மை?- தேநீர் தான்.

வழ: கோவிலால் வந்த பின் வீட்டில் கள்ளு குடித்தாரா?- நான் காணவில்லை.

வழ: வீட்டிற்கு வெறியோடு வந்தாரா?-இல்லை.

வழ: வீட்டிற்கு வந்து என்ன செய்தார்? நித்திரை கொண்டார். 6 மணிக்கு நித்திரையால் எழும்பி ஒரு இடமும் போகவில்லை, அப்போது ஒரு வெடிச்சத்தம் கேட்டது.

நீதி: வெடிச்சத்தம்தான் கேட்டதா? ஆம்.

நீதி: யாரும் வெடி வைத்ததைக் கண்டீரா? - இல்லை.

வழ: உன் புருஷன் 1-ம் எதிரியுடன் பேச்சுப்பட்டது கேட்டதா? — இல்லை. பேச்சுப்பட்டால் எனக்கு கேட்டிருக்கும்.

நீதி: முதல் வெடி யார் வைத்ததென தெரியுமா? 1-ம் எதிரி கொக்கு, குருவி சுடுவது வழக்கம். அன்றும் அவர்தான் சுட்டிருப்பார் என நினைத்தேன்.

நீதி: ஏன் 1-ம் எதிரி தான் கொக்கு, குருவி சுட்டார் என நினைத்தாய்?— 1-ம் எதிரி குருவி சுடுவது எனக்குத் தெரியும். வேறு எவரும் சுடுவது வழக்கமில்லை.

வழ: பொழுதுபட ஆறு மணிக்கு பின் என்ன நடந்தது? — [மௌனம்.]

நீதி: வழக்கு முடிவைப் பற்றி இப்போ யோசிக்காதே. நல்லாய் யோசித்து பதில் சொல். என்ன நடந்தது? — ஒன்றும் நடக்கவில்லை.

நீதி: 6 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் என்ன நடந்தது? — ஞாபகத்தில் இல்லை.

வழ: 1-ம் எதிரி துவக்கால் வெடி வைக்கும்போது 2-ம் எதிரி லைட் பிடித்ததை கண்டீர்? — ஆம். 1-ம் எதிரி வரும்போது கூடவே இரண்டாம் எதிரியும் வந்தார். வெடி வைக்கும் போதுதான் 2-ம் எதிரி லைட்பிடித்தார். 'மாப்பாணு வெளியில் வாடா' என்று 1-ம் எதிரி கூப்பிட்டுக் கொண்டுவந்தார். அப்படி சொன்னவுடன் 1-ம் எதிரி சுட்டார். நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு நின்றேன்.

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

## பிரதமர் உத்தரவு

கொழும்பு, வியாழன்

தற்பொழுது கமக்காரர்களை எதிர்நோக்கும் தண்ணீர் கஷ்டம், கடனுதவி போன்ற பிரச்னைகளை உடனடியாக நிவிர்த்தி செய்வதற்கான திட்டத்தை தயாரிக்கும்படி பிரதமர் நீர்ப்பாசன இலாகாவிற்கு உத்தரவிட்டுள்ளார். இத் திட்டம் உடனடியாக செயற்படுத்தப்பட வேண்டுமென்றும் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டுமென்றும் மேலும் பிரதமர் நீர்ப்பாசன அதிபரைக் கேட்டுள்ளார்.

அண்மையில் பிரதமர் மேற்கொண்ட சுற்றுப்பிரயாண அனுபவங்களைக் கொண்டே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## புதிய அமெரிக்க தூதர்

கொழும்பு, வியாழன்

திரு. அன்ரு வி கொறி என்பவர்இலங்கையில் புதிய அமெரிக்க தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு வயது 63. ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் பயின்றவர். எம். ஏ. பட்டதாரி 1947-ம் ஆண்டுவரை கல்வித்துறையில் ஈடுபட்டவர். கீழைத்தேய விவகாரங்களில் நிறைந்த அறிவுபடைத்தவர். லாகோவில் 'கொன்சல் ஜெனர'லாக இருந்திருக்கிருர். கடைசியாக சியரீயோலியானில் கடமையாற்றியுள்ளார்.

## கூப்பன் யாருடையது?

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை வங்கிக்கு முன்னுலுள்ள வீதியில் இருபிள்ளைக் கூப்பன்கள் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது: உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று மாலை 6 மணி முதல் 7 மணி வரை திரு. கே. சித்திரவடிவேலு அவர்கள் பக்கவாத்திய சகிதம் பக்திப் பாடல்கள்பாடுவார். இரவு 7 மணிக்கு சுக்கிரவார அம்மன் உற்சவம் நிகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org